//

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**

**அசல் வழக்கு எண்.137/2022**

2025ம் ஆண்டு அக்டோம்பர் மாதம் 13ம் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.1** ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி திருமதி. S. சுசீலா, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம், என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.மல்லப்பா | வட்டம் | : | |
| த/பெ. | : | | மாவட்டம் | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |

**வா.சா.1 : முதல் விசாரணை**:

(சாட்சிக்கு கன்னடம் மொழி மட்டுமே தெரியும் என்பதால் கன்னடம் மொழிப் பெயர்பாளராக வழக்கறிஞர் C.K.ரமேஷ் நியமிக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்பட்டது.)

நான் இவ்வழக்கின் 1ம் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன். 10.06.1975ம் தேதியிட்ட போலப்பா பெயருக்குண்டான நில உடமை பதிவேடு அசல் **வா.சா.ஆ.1** ஆகவும், 09.05.2011ம் தேதியிட்ட 1ம் வாதி பெயருக்குண்டான பாகப்பிரிவினை ஆவணம் அசல் **வா.சா.ஆ.2** ஆகவும், 28.03.2012ம் 2ம் வாதி பெயருக்குண்டான பாகப்பிரிவினை ஆவணம் அசல் **வா.சா.ஆ.3** ஆகவும் ,தாவா சொத்துகளுக்குண்டான கந்தாய இரசீத வரிசை எண்ணிக்கை 3 அசல் **வா.சா.ஆ.4** ஆகவும், 07.10.2021ம் தேதியிட்ட தாவா சொத்துக்ளுக்குண்டான அடங்கல் பதிவேடு சான்று நகல் **வா.சா.ஆ.5,** 26.07.2022ம் தேதியிட்ட வாதிகள் செய்து கொடுத்துள்ள பொது அதிகார பத்திரம் அசல் **வா.சா.ஆ.6** ஆகவும், புலவரைபடம் சான்று நகல் **வா.சா.ஆ.7** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.10.13 17:55:16 +0530

District Munsif